# சித்தர்கள் மறுக்கும் சிலை வழிபாடு

# Rejection of Idol Worship by Siddhas

***முனைவர் க. இரவி***
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திருவில்லிபுத்தூர்

**Dr. K. Ravi**
*Associate Professor, Head of Department*
*Government Arts and Science College*
*Srivilliputur*

**Citation**: Ravi, K. "Rejection of Idol Worship by Siddhas." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 3, 2025, pp. 49-54.

*https://doi.org/10.5281/zenodo.20068913*

***ஆய்வுச் சுருக்கம்***
*சித்தர் இலக்கியத்தின் வழிபாட்டு தத்துவங்களில் உருவங்கள் பற்றியும், சிலை வழிபாட்டை மறுப்பதை பற்றியும், அவற்றிற்கு கண்டனம் தெரிவிப்பதையும் பற்றி ஆராய்வதாக அமைகின்றது. சித்தர்கள் சித்தாதிகள் எனப்பட்டனர். இறைவனை வேறு எங்கும் பார்க்காதே உன் உள்ளத்திலே பார் என்று தமது பாடல்களில் வலியுறுத்தியுள்ளனர். புதுமையான கருத்துக்களையும் புரட்சிகரமான சிந்தனைகளையும் மூட நம்பிக்கைகளை எதிர்க்கும் நிலைகளையும் பற்றி ஆராய்வதாக வெளிப்படுத்துவதாக கட்டுரை அமைகின்றது.*
***கலைச்சொற்கள்:*** *சித்தர், சிலை வழிபாடு, சித்தாதிகள், சிவவாக்கியர், ஆலய வழிபாடு*

**Abstract**
*This study explores the worship philosophies in Siddhar literature, focusing on their views regarding idols and their outright rejection of idol worship. Siddhars, also known as Siddhadhis, emphasized the idea that divinity should not be sought elsewhere but within oneself. Their compositions strongly advocate this belief. The article delves into their novel ideologies, revolutionary thoughts, and opposition to superstitions.*
***Keywords****: Siddhars, Idol Worship, Siddhadhis, Sivavakkiyar, Temple Worship*

## முன்னுரை

*சித்தர்கள் சித்தாதிகள் எனப்பட்டனர். சித்திப் பெற்றவர் சித்தி எனப்பட்டனர். அணிமா முதலிய சித்திகள் கைவரப்பெற்றவர்களே சித்தர்கள் எனப்பட்டனர். முக்திவழி சித்திநெறி என்பது அறிவு, சிந்தித்தல் நிறைவேற்றுதல், முக்தியை யோகத்திற்குள் ஒன்றுதல் என்னும் பொருள்களைக் கொண்ட சொல்லாகும். மன ஒடுக்கம் சித்தாலயம் எனப்பட்டது. சித்தர்கள் அனைவரும் கையாண்ட மொழி தமிழ் மொழியாகும். அவர்களின் பாடல்கள் தமிழ் மொழியிலேயே காணப்படுகின்றன. வாழ்க்கைக் கலையை பிறர்க்கு உணர்த்தியதோடு வாழ்ந்தும் காட்டிய இலக்கியங்கள் சித்தர்களுக்கு சிலைவழிபாட்டினை மறுப்புத் தெரிவித்ததை பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

## சிலைவழிபாட்டு மறுப்பு

*சமயம் ஒரு சமூக அமைப்பாக மாறும்போது கூடவே அதையொட்டிய நெறிமுறைகளும், வழக்கங்களும் உருவாகத் தொடங்குகின்றன. ஆனால் அவை மக்களின் சமய உணர்விலுள்ள*

*தூய்மையை நாளடைவில் குறைத்து விடவும் செய்கின்றன. சம்பிரதாயங்களைக் கடைப்பிடிப்பது என்பது தன்னிலை உணர்வதைவிட முக்கியத்துவம் பெற்றதாகிவிடுகின்றது. காலம் செல்லச்செல்ல இவையே பெரும் தளைகளாகவும் மாறி விடுகின்றன. மெய்யறிவை நாடும் மனித சமுதாயம் இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து விடுபடவேண்டுமென்பதே சித்தர்களின் ஆவல். அந்த வகையில் உருவ வழிபாட்டையும், புண்ணியத் தலங்களையும் நோக்கியுள்ள யாத்திரை, தீர்த்தங்களில் முழுகுதல், தவவேடச்சின்னங்கள் அணிதல் முதலான சடங்குகளையும் அவர் அறவே மறுக்கின்றார். இவற்றைக் கடுமையாகக் கேலி செய்கின்ற போக்கு இவருடைய பாடல்களில் மிகுந்திருப்பதைக் காணலாம்.*

***உருவ வழிபாட்டை கண்டனம் செய்யும் சிவவாக்கியர்***

***செங்கலுங் கருங்கலுஞ் சிவந்தசாதி லிங்கமும்***

***செம்பிலும் தராவிலும் சிவனிருப்ப னென்கிறீர்[1]***

*தீவிரமாகக் கண்டனம் செய்கிறார் சிவவாக்கியார். கல்லிலும், உலோகத்திலும் பொம்மை செய்து வைத்துகொண்டு, அதில் சிவனைத் தேடிப் பொழுதை வீணடிக்கிறீர்களே என்று வருந்துகிறார்.*

**தத்துவமும் சடங்கும்**

*உடைக்கப்பட்ட கல்லின் ஒருபகுதி வாயிற்படியில் மிதிகல்லாகவும், மற்றொரு பகுதி கருவறையுள் கடவுள் சிலையாகவும் மாறுவதைக் கண்டு சிவவாக்கியர் வியக்கிறார். இத்தகைய சமுதாயச் சீர்திருத்த தத்துவமானது,*

***ஓசையுள்ள கல்லைநீர் உடைத்திரண்டு செய்துமே***
***வாசலிற் பதித்ததகல்லை மழுங்கவேமி திக்கிற்***
***பூசனைக்கு வைத்தகல்லில் பூவும்நீருஞ் சார்த்துறர்***
***ஈசனுக் குகந்தகல் எந்தகல்லு சொல்லுமே[2]***

*என்ற பாடலில் தெளிவுறுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

*தத்துவங்களைச் சடங்காக்கி இறைவனைக் கல்லாக்கிவிட்ட மூடர்கள் உயிரோடுயிராகக் கலந்து நிற்கும் இறைவனைக் காண மறுப்பதை,*

***சாவதான தத்துவச் சடங்குசெய்யு மூமைகாள்***
***தேவர்கல்லு மாவரோ சிரிப்பதன்றி யென்செய்வேன்***
***மூவராலு மறியொணாத முக்கணன் முதற்கொழுந்து***
***காவலாக வும்முளே கலந்திருப்பன் காணுமே[3]***

*என்று எண்ணிச் சிரிக்கின்றார் அவர்.*

*மெய்யான இறையனுபூதியை நேரடியாகப் பெறவேண்டுமேயல்லாமல் மற்றொரு உபாதிமூலமாக அதைப்பெற விழைவது மூடத்தனம் என்பதே சிவவாக்கியரின் கருத்து. சிற்பிகளின் கைவேலைப்பாடான சிலையுருவங்களை உயர்ந்த தெய்வமென்றெண்ணி அவற்றிற்குப் பெயர்களையும் இட்டு அமைக்கின்றார்கள். அனைத்தையும் படைத்த முழுமுதற்கடவுளை உம்முள்ளத்தில் சிந்தனை செய்யுங்கள் எனும் அவரது அறிவுரையை,*

***பண்ணிவைத்த கல்லையும் பழம்பொருள தென்றுநர்***
***எண்ணமுற்று மென்னபே ருரைக்கிறாக ளேழைகாள்***
***பண்ணவும் படைக்கவும் படைத்துவைத் தளிக்கவும்***
***ஒண்ணுமாகி யுலகளித்த வொன்றைநெஞ்சி லுன்னுமே[4]***

*என்ற பாடல் வெளிப்படுத்துகின்றது.*

*இறைவன் உருவற்றவன் என்பதனை,*

***கட்டையாற்செய் தேவருங் கல்லினாற்செப் தேவரும்***
***மட்டையாற்செய் தேவரும் மஞ்சளாற்செபப் தேவரும்***
***சட்டையாற்செய் தேவரும் சாணியாற்செபப் தேவரும்***
***வெட்டவெளிய தன்றிமற்ற வேறுதெய்வ மில்லையே***[5]

*என்று உறுதியாக மொழிகிறார்.*

**சிலை வழிபாடு**

*சிலைவழிபாடு ஒருக்காலும் மெய்யான இறையின்பத்தையளிக்காது என்பதை,*

***கல்லுவெள்ளி செம்பிரும்பு காப்ந்திடுந் தராக்களில்***
***வல்லதேவ ரூபபேத மங்கமைத்துப் போற்றிடின்***
***தொல்லையற் றிடப்பெருஞ் சுகந்தருமோ சொல்லுவீர்***
***இல்லையில்லை யில்லையில்லை யீசனாணை யில்லையே***[6]

*என்று சிவவாக்கியர் முடிவாகக் கூறுகிறார்.*

**ஆலய வழிபாடு**

*ஆலய வழிபாடு, புனிதநீராடல் முதலானவற்றின் வீணான தன்மை சிலை வழிபாட்டைக் கண்டனம் செய்வதோடு ஆலய வழிபாடு ஆறுகுளங்களில் புனிதநீராடல், புண்ணிய தலயாத்திரை முதலான நடவடிக்கைகளையும் சிவவாக்கியர் மட்டுமீறிய கடுமையுடன் இகழ்கிறார். யாராலும் ஆக்கவும் அழிக்கவும் இயலாத கோயிலும், குளங்களும் மனிதனின் மனத்தினுள்ளே இருக்கையில்,*

***கோயிலாவ தேதடா குளங்களாவ தேதடா***
***கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே***
***கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே***
***ஆவதும் அழிவதும் இல்லையில்லை யில்லையே***[7]

*என்று கோயில் குளங்களை நாடுவதை விட்டுவிட்டுக் கடவுளை உங்களுக்குள்ளேயே கண்டுகொள்ளுங்கள் என்கிறார். நல்ல புண்ணிய தீர்த்தங்கள் எங்கேயென்று நாடியோடும் மாந்தரைச் சிவவாக்கியர்,*

***நல்லமஞ் சனங்கள்தேடி நாடிநாடி யோடுறர்***
***நல்லமஞ் சனங்களுண்டு நாதனுண்டு நம்முளே***[8]

*என அறைகூவி விளிக்கிறார்.*

**மூடத்தனம் பற்றிய கருத்து**

*நாள்தோறும் நீரில் குளிப்பதால் இறைவனது அருளைப் பெற்றுவிடலாம் என்று பலரும் நினைக்கின்றனர். இது மூடத்தனமாகும் என்பதனை,*

***காலைமாலை நீரிலே முழுகுமந்த மூடர்காள்***
***காலைமாலை நீரிலே கிடந்ததேரை யென்பெறும்***[9]

*என்று தெளிவுபடுத்துகின்றார். காலையும் மாலையும் தண்ணீரிலே மூழ்கினால் இறைவனருள் கிட்டுமாயின் எப்போதுமே நீரில் கிடக்கின்ற தேரையும் இறைவனுருள் பெற்றுவிடுமல்லவா? என்ற கேள்வியை எழுப்புகிறார்.*

*இறைவன் அந்த ஊரில் இருக்கின்றான், இந்த ஊரில் இருக்கின்றான் என்று ஊர் ஊராகத் தேடித் தேடியலையும் மாந்தரைப் பார்த்து,*

***இந்தவூரி லில்லையென் றெங்குநாடி யோடுர்***
***அந்தவூரி லீசனும் அமர்ந்துவாழ்வ தெங்ஙனே***[10]

*இவ்வூரிலில்லாத இறைவன் அவ்வூரிலிருப்பான் என்று என்ன உறுதி? என்று கேட்கின்றார். மேலும்,*

***தாரத்தலிங்க மூர்த்தியென்று தேடியோடும் தீதரே***
***தாத்தலிங்க முள்ளினின்ற சீவனைத் தெளியுமே***[11]

*என்று மக்களின் மனத்தைத் தெளிவிக்கின்றார். தாத்தம், லிங்கம், மூர்த்தி என்று ஊரூராகச் சென்று தேடுவோரே! அவை அனைத்தையும் உம்முள்ளேயே கொண்டுள்ள உம் சிவனை உன்னிப்பாகக் கவனிப்பீராக என்று அறிவுரை புகட்டுகின்றார். காடுமேடு குன்றுபள்ளங்கள் அகற்றியும் நாடுதேசம் விட்டலைவர் நாதன்பாதங் காண்பரோ? இல்லை. இறைவனை மனத்துள் அல்லால் எங்குத் தேடியும் பயனில்லை என்பது சிவவாக்கியச் சித்தரின் உயரிய சிந்தனையாகும்.*

**சிவவாக்கியரின் சமுதாய உயரிய சிந்தனைகள்**

*சிவ வாக்கியரின் பாடல்களில் புதுமையான கருத்துகள், புரட்சிகரமான சிந்தனைகள், எளிய அடிகள், பாமர மக்கள் பயன்படுத்தும் வழக்குச் சொற்கள் என்பன போன்ற செய்திகள் அடங்கியுள்ளன.*

*கடவுள் என்பவர் பற்றற்றவர், பரவி நிற்பவர், விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டவர். இத்தகைய இறைவனைக் கல்லில் வடித்து அதற்குப் பூசை செய்து அதன் மூலம் அவனுடைய கருணையைப் பெற முடியும் என்று நம்பும் மனிதர்களை சிவவாக்கியர் கடுமையாகச் சாடுகிறார்.*

***பண்ணி வைத்த கல்லையம் பழம் பொருள் அடுதன்று நீர்***
***எண்ண முற்றும் என்னபேர் உரைக்கிறீர்கள் ஏழைகாள்***
***பண்ண வும்ப டைக்கவம் படைத்து வைத்த எரிக்கவும்***
***ஒண்ணு மாகி உலகளித்த ஒன்றை நெஞ்சில் உன்னுமே***[12]

*என்று உள்ளத்தில் உணர வேண்டிய இறைவனைக் கல்லுக்குள் வடித்து அதனைக் கடவுளாக வணங்கும் முறையைச் சாடுகிறார். எனவே இவர் உருவ வழிபாட்டு முறையை முற்றிலுமாக எதிர்க்கிறார்.*

*இந்து மதத்தின் ஆணிவேரே மறுபிவி ஆகும். தத்துவத்தின் உதவியினால் தான் நிலைத்து நிற்கின்றது எனலாம். ஒவ்வொரு மானிட உயிரும் மரணத்திற்குப் பிறகும் வாழ்கின்றது.*

*மனிதர்கள் தாம் வாழும் காலத்தில் செய்த நல்ல வினை, தீய வினைகளுக்கு ஏற்ப அவர்களுடைய ஆத்மா (உயிர்) மீண்டும் மண்ணில் பிறக்கின்றது. நற்செயல் செய்தால் நல்வாழ்க்கையும், தீவினை செய்தால் வறுமை, துயரம், கவலை போன்றவற்றால் வாழ்க்கை அமைவதாக இந்து மதம் உணர்த்துகின்றது.*

***புல்லாகி பூடாகிப் புழுவாய் மரமாகி***
***பல்விருகம் ஆகி பறவையாய் பம்புமாகி***
***கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய்***
***வல்அகரர் ஆகி முனிவராய் தேவிராய்***
***செல்லா நின்ற இத்தாவர - சங்கமத்துள்***
***எல்லா பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமானே***[13]

*என்று மாணிக்கவாசகர் ஒவ்வொரு மானிட உயிரும் இத்தகைய பிறவிகளை அடைகிறது என்று*

*உரைக்கின்றார். மேலும் இந்த நிலை அடையாமல் இருக்க வேண்டுமாயின் இறைவனைத் தொழுது பணிதல் ஒன்றே வழியாகும் என்று உணர்த்தப்படுகின்றது.*

*உயர்வு தாழ்வு என்ற இந்த சமுதாய அமைப்பு உலகின் வேறு எந்த நாட்டிலும் கிடையாது என்பதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.*

*சிவ வாக்கியர் மறுபிறவி கொள்கையை மறுகின்றார். அவர், உயிரும், உடம்பும் ஒன்றையொன்று பிரியாமல் நிற்கும். ஒன்று அழியின் இன்னொன்று அழிந்துவிடும் என்று கருத்துடையவராகவே இருந்துள்ளார்.*

*ஒருமுறை இறந்து போன உயிர் மீண்டும் உடலில் புகுவதில்லை என்று சிவவாக்கியர் வலியுறுத்திக் கூறுகின்றார்.*

*இயற்கையின் படைப்பில் மனிதர் அனைவரும் சமமானவர்களே என்ற சீர்திருத்த கருத்துக்களை ஏற்றிருந்த சித்தர்கள் சாதியக் கோட்பாட்டினை ஏற்க மறுத்தனர்.*

*இக்கருத்தினை ஏற்பதில் சிவவாக்கியர், முதன்மையானவராகக் காணப்பட்டார். மேலும் இத்தகைய சாதி பாகுபாடு ஒழிய வேண்டுமாயின் அதற்குக் கலப்புத் திருமணங்கள் அவசியம் என்பது இன்றையச் சீர்திருத்த சிந்தனையாளர்களின் கருத்து. இக்கருத்தினை தன் காலத்திலேயே சிவவாக்கியர் வலியுறுத்திக் கூறுகின்றார்.*

*சிவவாக்கியர் பாடல்கள், சமுதாய சிந்தனைகளையும், பழமையையும், மூட நம்பிக்கைகளை எதிர்க்கும் நிலைகளையும், மக்கள் அறிவு மேன்மை அடைந்திடவேண்டும் என்ற விழைவும், பகுத்தறிவுக் கருத்துகளும் கொண்டதாகவே காணப்படுகின்றன.*

**முடிவுரை**

*மனிதன் உலக வாழ்க்கையில் சேர்த்து வைக்கும் செல்வம், புகழ், ஆடம்பர வாழ்வு, மனித உடல் என்ற அனைத்தும் நிலையில்லாதது என உணர்த்த திருமூலர் பல பாடல்களைப் பாடியுள்ளார். சிவவாக்கியர் உருவ வழிபாட்டை வன்மையாக எதிர்த்துப் பாடல்கள் பாடியுள்ளார். சித்தர்களின் சமநோக்குப் பார்வை, சினத்தால் உண்டாகும் தீய விளைவுகளை பற்றி அறியமுடிகின்றது. இறைவனை பல்வேறு உருவங்களில், பல்வேறு வடிவங்களில் வழிபட்டாலும் பரம்பொருள் என்பது ஒன்றேயாகும் என்பதைத் திருமூலர் தம் பாடலில் விளக்கியுள்ளார்.*

**சான்றெண் விளக்கம்**

*1. சிவவாக்கியர் பாடல்களில் சமுதாய சிந்தனைகள், பா. 33.*
*2. மேலது., பா. 312.*
*3. மேலது., பா. 121.*
*4. மேலது., பா. 223.*
*5. மேலது., பா. 503.*
*6. மேலது., பா. 515.*
*7. மேலது., பா. 32.*
*8. மேலது., பா. 219.*
*9. மேலது., பா. 122.*
*10. மேலது., பா. 416.*
*11. மேலது., பா. 472.*
*12. மேலது., ப. 57.*
*13. மேலது., ப. 77.*

**துணைநின்ற நூல்கள்**


1. கோமதிநாயகம், இ. சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி, சாந்தா பதிப்பகம், 2008.
2. ஆச்சாரியா, பி. எஸ். அகத்தியர் முதல் வாரியர் வரை சித்தர்கள் அறுபதுபேர் வாழ்வும் வாக்கும், நர்மதா பதிப்பகம், 2011.
3. பன்னீர்செல்வம், ஏடிஎம். திருவண்ணாமலைச் சித்தர் இடைக்காடர், சூர்யா பதிப்பகம், 2012.
4. இந்திரா சௌந்தர்ராஜன், சித்தர்கள் ராஜ்ஜியம், சிவா கிராபிக்ஸ், 2012.
5. மாணிக்கம், அ. (உ. ஆ.), திருமந்திரம் மூலமும் உரையும் மூன்றாம் தொகுதி, வர்த்தமானன் பதிப்பகம், 2002.
6. சிவசங்கரன், வ. (உ. ஆ.), திருவாசகம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், 2007.
7. அறவாணன், க. ப. திருக்குறள் தெளிவுரை, தமிழ்க்கோட்டம், 2007.
8. பாலசுப்பிரமணியன், கு. வெ. (உ. ஆ,), புறநானூறு மூலமும் உரையும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்.


**References**


1. Gomathinayagam, I. *The Life Education Shown by the Siddhars*. Shantha Publications, 2008.
2. Acharya, P. S. *From Agathiyar to Varrier: The Lives and Sayings of Sixty Siddhars*. Narmadha Publications, 2011.
3. Panneerselvam, A. T. M. *Thiruvannamalai Siddhar Idaikadar*. Surya Publications, 2012.
4. Indira Soundarrajan. *The Kingdom of the Siddhars*. Siva Graphics, 2012.
5. Manickam, A. (Ed.), *Thirumandiram: Original Text with Commentary Vol. 3*. Varthamaanam Publications, 2002.
6. Sivasankaran, V. (Ed.), Thiruvasagam: Commentary and Explanation. Manivasagar Publications, 2007.
7. Aravanan, K. P. *Thirukkural: Detailed Commentary*. Tamilkottam, 2007.
8. Balasubramaniyan, K. V. (Ed.), *Purananuru: Original Text with Commentary*, New Century Book House.